Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிக்கண்ணு | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னக்காளை | தொழில் | : | ஓய்வு, வனவர் |
| கிராமம் | : | கஞ்சநாயக்கன்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | மருங்காபுரி, திருச்சி மாவட்டம் | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2025.

(எதிரிகள் A4, A7 ஆஜர் A1, A2, A3, A5, A9, A10, A11, A14 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 petition allowed and A6, A8, A12, A13 are died)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, கஞ்சநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2004 ஆம் ஆண்டு கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில், கன்னிவாடி பீட் வனக்காவலராக பணிபுரிந்தேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் பணிபுரிந்த போது, கன்னிவாடி கிராமத்தை சேர்ந்த திருமலைச்சாமி ரெட்டியார் மகன் ராஜாரம் என்பவர் அவரது தோட்டத்தில் தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை ஒரு கும்பல் வெட்டுவதாக அவரது தோட்டத்து காவலர் தெய்வேந்திரன் சொன்ன தகவலின் பேரில் , எங்களது வனச்சரக அலுவலகத்திற்கு வந்து கொடுத்த புகாரின் பேரில் எங்களது வனச்சரக அலுவலர் உத்தரவின் பேரில் கன்னிவாடி பிரிவு வனவர் பிச்சை என்பவர் தலைமையில் நானும், சரக பணியாளர்கள் உள்ளடக்கிய தனி குழுக்களுடன் ராஜாராம் என்பவரின் பட்டா நிலத்திற்கு மாலை சுமார் 05.00 மணியளவில் சென்று பார்த்தபோது, அங்கு 7 நபர்கள் சேர்ந்து தோதகத்தி மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். நாங்கள்

அவர்களை மடக்கி பிடித்து அவர்கள் வெட்ட பயன்படுத்திய இரண்டு கோடாரி, இரண்டு ரம்பங்கள், ஒரு வெட்டருவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அப்போது மேற்படி எதிரிகளால் வெட்டப்பட்ட 7 மரங்களில் இருந்து 28 செதுக்கப்பட்ட கட்டைகளையும், இரண்டு உருட்டு கட்டைகளையும் கைப்பற்றினோம். அந்த இடத்தில் வைத்து பிடிபொருட்களை வனவர் மகேந்திரன் என்பவர் அளந்து அளவீடு செய்தார். அந்த பிடிபொருட்களை எங்களது வனவர் பிச்சை ஸ்தல மகசர் தயாரித்தார். அந்த ஸ்தல மகசரில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகசரில் என்னால் சாட்சியாக போடப்பட்ட கையெழுத்துகளில் ஒரு கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து என்னால் போடப்பட்டது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.17/PW.4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பிடிபொருட்களுக்கு என்னால் வெள்ளை பெயிண்ட்டால் தொடர் வரிசை எண் கொடுக்கப்பட்டது. எங்களது வனச்சரக அலுவலர் உத்தரவின் படி எங்களால் கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களை அந்த நிலத்தின் உரிமையாளர் திரு. ராஜாராம் என்பவரிடம் ஒப்படைத்து , தனிதாளில் ஒப்புதல் பெறப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகளால் பயன்படுத்தப்பட்ட இரண்டு கோடாரிகள், இரண்டு ரம்பம், ஒரு அருவாள் ஆகியவற்றை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு எதிரிகளுடன் கொண்டு வந்து ஒப்படைத்தோம். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளிடம் எங்களது குழுவில் இருந்த வனவர்கள் மற்றும் வனக்காப்பாளரால் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரிகள் பயன்படுத்திய பிடிபொருட்களான இரண்டு கோடாரிகள், இரண்டு ரம்பம், ஒரு அருவாள் ஆகியவற்றை  கன்னிவாடி கிராம நிர்வாக உதவியாளர் தண்டபாணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மேல்நடவடிக்கைக்கா அவரிடமிருந்து பெறப்பட்டு அந்த பிடிபொருட்களுக்கு H. நமுனா வனக்காப்பாளர் சேர்வராயன் அவர்களால் தயார் செய்யப்பட்டது. மேற்படி H. நமுனா மற்றும் பிடிபொருட்கள் கன்னிவாடி வனச்சரக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றையதினம் வனச்சரக அலுவலர் உத்தரவின் பேரில் மறுநாள் காலையில் நான் கன்னிவாடி பீட் வனக்காவலர் என்ற முறையில்

இவ்வழக்கின் எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உதவியாக இருந்தேன் மற்றும் இவ்வழக்கின் பிடிபொருட்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உதவியாக இருந்தேன். கடந்த 29.02.2004 ஆம் தேதி எங்களது கன்னிவாடி வனச்சரக அலுவலரின் உத்தரவின் பேரில் மறுபடியும் சம்பவ இடத்திற்கு சென்று ஸ்தல தணிக்கை செய்ய உத்தரவிட்டதன் பேரில் நானும், பிரிவு வனவர் திரு. பிச்சை மற்றும் வனக்காப்பளார் சேர்வராயன் ஆகியோர்களும் மற்றும் அந்த இடத்தின் உரிமையாளர் ராஜாராமும் சேர்ந்து சம்பவ இடத்திற்கு சென்றோம். அந்த இடத்தில் ஸ்தல தணிக்கை செய்த போது இரண்டு உருட்டு கட்டைகள் இருந்தது. அதை வனவர் பிச்சை கைப்பற்றி அந்த இடத்திலேயே நிலத்தின் உரிமையாளர் ராஜாரமிடம் ஒப்படைத்து தனித்தாளில் ஒப்புகை கடிதம் பெற்றார். பின்னர் எங்களது குழு கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்துவிட்டது. கடந்த 02.05.2004 ஆம் தேதி கன்னிவாடி வனச்சரக அலுவலரின் உத்தரவின் பேரில் கன்னிவாடி பீட், கோம்பை சராகம், மாத்தாங்கரை பகுதியில் தணிக்கை செய்த போது , புதர் மறைவில் 5 தோதகத்தி செதுக்கப்பட்ட கட்டைகள் கிடந்தன. அதை கைப்பற்றி கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தோம். கடந்த 05.05.2004 ஆம் தேதி இவ்வழக்கின் எதிரி முருகேசன் நீதிமன்ற பிணையில் வந்த பின்பு எங்கள் அலுவலகத்தில் கையெழுத்திட வந்தபோது, அவரை வனச்சரக அலுவலர் விசாரித்தபோது அவர் மேற்படி எங்களது குழுவால் கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களை 26.02.2004 ஆம் தேதி மறைத்து வைத்திருந்ததாக சொன்னதன் பேரில் மேற்படி எங்களது குழுவால் கடந்த 02.05.2004 ஆம் தேதி கைப்பற்றப்பட்ட 5 செதுக்கிய தோதகத்தி கட்டைகளை மறைத்து வைத்திருந்ததாக சொன்னதன் பேரில் அந்த 5 செதுக்கிய தோதகத்தி மரக்கட்டைகள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளது தெரியவந்ததால் அந்த 5 செதுக்கிய கட்டைகளை அந்த நிலத்தின் உரிமையாளர் ராஜாராம் என்பவரை வரவழைத்து அவரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர் பெற்றுக்கொண்டதற்கு தனித்தாளில் ஒப்புகை கடிதம் கொடுத்தார். எதிரி முருகேசன் கடந்த 05.05.2004 ஆம் தேதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில்

சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் என்னிடம் காட்டப்படும் ஒரு கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ-18/PW.4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Sd/-Thiru.S.Anbuthasan
District Munsif cum Judicial Magistrate
Athoor